ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்

கே. என். எம்.
மீரூன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 585

ஈழநாடு
EELANADU


அருணு
ஒருநாள்
குஞ்சுகள்
விலை சதம் =/40
அருணு ஏஜென்ஸீஸ்
அளவெட்டி.

# 25,000 பேருக்கு வேலை வசதி

## 1000 புதிய கைத்தொழில் நிலையங்களில் கிடைக்கும்

கொழும்பு, வியாழன்

**புதிதாக அமைக்கப்படவிருக்கும ஆயிரம கைத்தொழில் நிலையங்களில் 25,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவிருக்கிறது. இந் நிலையங்கள் அரசாங்கத்தாலும, கூட்டுறவு ஸ்தாபனங்களினுலும நிறுவப்படும.**

இதுவரை சுமார் 500 கைத்தொழில் நிலையங்கள் பூர்த்தியாகிவிட்டன. சென்ற ஆண்டு ஆரம்பமான இத்திட்டம் இவ்வாண்டு முடிவில் பூர்த்தியாகும். இத் திட்டத்திற்கென அரசாங்கம் 1கோடி 80 லட்சம்ரூபா ஒதுக்கியுள்ளது.

## புதிய கட்சியின் நோக்கமும் கொள்கையும்

### மொழி, கலைகலாச்சாரத்தைப் பேணும் சமத்துவ சமுதாயம் அமைப்பது

யாழ்ப்பாணம், வெள்ளி

இந்நாட்டில் ஒரு சமத்துவ சமுதாயத்தை நிறுவி தமிழ்மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றைப் பேணி வளர்ப்பதுதான் புதிய அரசியல்கட்சியான ஈழத் தமிழர் விடுதலை இயக்கத்தின் நோக்கமாகும்.

புதிய கட்சியின் நோக்கங்களும் திட்டங்களும் நேற்று வெளியிடப்பட்டன, திருவாளர்கள் மு. மாணிக்கம். ஆ. நடராசா ஆகிய இருவரும் கையெழுத்திட்டு கட்சியின் நோக்கங்களையும் திட்டங்களையும் வெளியிட்டிருந்தனர். அத்துடன் புதிய கட்சியில் சேருவதற்கான ஒரு விண்ணப்பப் பத்திரத்தையும் வெளியிட்டிருந்தனர்.

ஐக்கியநாடுகள் தாபனத்தின் மனித உரிமைகள் பிரகடனத்திற்கும், ஐக்கியநாடுகள் ஆணையாளரின் தேசிய சிறுபான்மையினர் பற்றிய சிபார்சுக்ளுக்கும் அதனின் சுயநிர்ணய கோட்பாட்டிற்கு அமையவும் ஈழத்தமிழினத்தின் அரசியல் பொருளாதார, மொழி சமூக, பண்பாட்டு விடுதலையைக் காண்பது கட்சியின் முக்கிய நோக்கமாக இருக்கும்.

ஓர் அரசியல் கட்சியின் பாராளுமன்றக்குழு, அக்கட்சிக்குக் கட்டுப்பட்டே ஒழுகவேண்டும் என்பது புதியகட்சியின் கருத்தாகும். கட்சியைப் பரந்த அடிப்படையில் கட்டியெழுப்புவதில் புதிய கட்சி அக்கறை காட்டும்.

தமிழினத்தின் எதிர்காலத் தலைவர்கள் தமிழ் மண்ணில் [illegible]வேரூன்றியவர்களாக இருத்தல் வேண்டுமென்றும், கொள்ளுப்பிட்டியிலும், கறுவாட்டாலும் வதித்து அந்நிய நகரிகப் பண்பாட்டிற்கு [illegible] அடிமைப்பட்டு வாழும் தமிழர்கள், ஒருபோதும் எமது மக்களை விடுதலைப் பாதையில் இட்டுச் செல்ல முடியாதென்றும், புதிய கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

தீண்டாமை ஒழிப்பில் புதிய கட்சி அதிக அக்கறை காட்டுமென்றும் அறியப்படுகிறது.

ஈழத் தமிழர் விடுதலை இயக்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம், இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

## ஆட்சேபக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வல்வெட்டித்துறையில் நடந்த பொலிஸ், இராணுவ தாக்குதல்களுக்கு ஆட்சேபம் தெரிவிப்பதற்காக வல்வெட்டித்துறையில் ஒரு பொதுக்கூட்டத்தை இம் மாத இறுதியில் நடாத்த புரட்சிவாத கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பாடு செய்துவருகிறது.

ஆட்சேபக்கூட்டம் நடைபெறும்தினம் பருத்தித்துறையிலிருந்து சுமார் 5 மைல் நீளமான ஓர் ஆட்சேப ஊர்வலத்தையும் நடத்தவும் திட்டமிட்டுள்ளது. தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக கரையோரக் கிராமங்களிலும் ஆட்சேபக் கூட்டங்களை நடத்தவும் தீர்மானித்துள்ளது.

## கிழக்குப்பகுதி அசைஸ்விசாரணை

### 18-மதிகதி ஆரம்பம

திருகோணமலை, வியா

கிழக்குப்பகுதிஅசைஸ்நீதிமன்ற முதலாவதுபருவகால விசாரணை இம்மாதம் 18-ம் திகதி நீதியரசர் ஏ. சி. ஏ. அலஸ் முன்னிலையில் ஆரம்பமாகும்.

விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் கொலைவழக்குகளில் அதிகமானவை [illegible] மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவைகளாகும்.

## ரயில் தொல்லைக்கு சிறைத்தண்டனை

வவனியா, வியாழன்.

புகையிரதத்தில் சக பிரயாணிகளுக்கு தொந்தரவு கொடுத்ததாகவவனியாவில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர் ஒருவருக்கு வவனியா மாஜிஸ்திரேட் தி. பரமகுரு 2மாத சிறைத்தண்டனை விதித்தார்.

உங்களைப்போல் நாலுபேர் இருந்தால், பெண்கள் வெளியில் தலைகாட்ட முடியாதென்றும், இனிமேலாவது திருந்தி நடக்கும்படியும், தீர்ப்பளிக்கும்போது நீதிபதி தெரிவித்தார்.

## வைசூரிக்கு 34 பேர் பலி

புதுடில்லி, ஏப். 13

உத்தரபிரதேசத்திலுள்ள ஒரு கிராமத்தில் இருவாரங்களில் வைசூரி நோயினுல் 12 குழந்தைகள் உட்பட 34 பேர் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

வடபகுதி

## வியாபாரிகள் குறைபாடு:

### யாழ். எம். பி. யிடம் புகார்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன கடைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கும் உளுத்த மல்லியை உணவு மந்திரிக்கு பார்சலில் அனுப்ப வேண்டுமென்று யாழ்ப்பாணம் எம். பி. திரு, ஜி. ஜி. பொன்னம்பலத்தை வட இலங்கை உணவுதானிய மொத்த வியாபாரிகள் இறக்குமதியாளர்சங்கம் நேற்று முன்தினம் சந்தித்து கேட்டுக்கொண்டது. உணவு மந்திரியை சந்தித்து, இந்த மல்லி மனிதன் பாவிக்க கூடியதா? என்று கேட்கும்படியும் சங்கம் கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சர்க்கரை தட்டுப்பாட்டைப் பற்றி விளக்கமாக, சங்கத்தினர் திரு. பொன்னம்பலத்திடம் எடுத்துக்கூறி வடக்கிலே தமிழர்கள் முக்கியமாக பாவிக்கும், சர்க்கரை, புளி ஆகியவற்றை கூட்டுறவு மொத்த விபற்னவு ஸ்தாபனம்மூலம், தட்டுப்பாடின்றி இறக்குமதி செய்து கொடுக்கும்படியும் கேட்டுக் கொண்டது.

வெங்காயம் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்டாலும், அது யாழ்ப்பாணம் வியாபாரிகளுக்குக் கிடைக்க முடியாமலிருக்கிறதென்றும் மற்ற இடங்களைப்போல் யாழ்ப்பாணத்திலும் குறைந்த விலையில் இதனைப் பகிர்ந்து கொடுக்க ஒழுங்கு செய்யும்படியும் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

உணவுப்பொருட்கள் பங்கீட்டு அறிவுறுத்துச் சபைக்கு, வடஇலங்கை வர்த்தகர் சார்பாக ஒருவரை நியமிக்க வேண்டுமென்று ராஜாங்க அமைச்சரிடம் கேட்கும்படியும் சங்கம் தெரிவித்தது.

## வடபகுதி அசைஸ்

### 18ந் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி,

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் முதலாவது பருவகாலவிசாரணை இம்மாதம் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11மணிக்கு நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் ஆரம்பமாகும்.

வடபகுதி பிஸ்கால் அதிகாரியான அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா விசாரணைக்குரிய வழக்குகளின் தொகுப்புக்களை நீதியரசரிடம்கையளிப் பார் பொலிசாரின் மரியாதை அணிவகுப்பும் நடைபெறும், ஆரம்ப வைபத்தில் நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் கலந்து கொள்வார்கள்.

### விநியோகம் பற்றிப்புகார்

கொழும்பு, வியாழன்

பொதுமக்களுக்கு வெள்ள நிவாரணமாக அரசாங்கத்தினரால் வழங்கப்பட்ட பணம் சில கிராம சேவகர்களினுல் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும்வழங்கப்பட்டுள்ளதென்ற புகாரைத் தொடர்ந்து சமூக சேவை மந்திரி விசாரணைநடாத்துமாறு தனதுஅதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்வார் பணத்தைத்துர்பிராயாகம்செய்த கிராம சேவகர்கள் மேல் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் மந்திரி மேலும் தெரிவித்தார்.

### அரசாங்க அதிபரின் விஜயம

அனலைதீவு, வியாழன்


உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு பொதுக்கூட்ட மொன்றைக் கூட்டி ஆராய்வதற்காக இம்மாதம்19-ம்திகதியாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவும் தீவுப்பகுதிக்கு காரியாதிகாரி திரு. விஜயசுலிங்கமும், விவசாயப் பகுதியைச் சேர்ந்த மேலதிகாரிகளும் அனலைதீவுக்கு விஜயம் செய்ய இருப்பதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியஜனுதிபதி பதவிக்கு16பேர் போட்டி

புதுடில்லி, ஏப். 13

இந்திய ஜனுதிபதி பதவிக்கான தேர்தலில் 16 பேர் போட்டியிடுகின்றனர். இது வரை 16 பேரின் அபேட்சா மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன.

காங்கிரஸல்லாத ஐந்து ராஜ்ய முதன் மந்திரிகளும் ராஜ்ய சபாவில் சோஷலிஸ்ட் கட்சி அங்கத்தவர் ஒருவரும் சேர்ந்து முன்னுள் பிரதம நீதியரசர் திரு. சுப்பாராவின் பெயரை இன்று தாக்கல் செய்தனர். அலிகாரைச் சேர்ந்த ஐ ஐப் ஹபீபின் பெயரை உப ஜனுதிபதி பதவிக்கு சமர்ப்பித்தனர். உப ஜனுதிபதி பதவிக்கு திரு. வி. வி. கிரியின் பெயரை காங்கிரஸ் கட்சி தாக்கல் செய்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

விண்ணப்பப் படிவங்கள்
விசேட பயிற்சிக்கான விண்ணப்பப் படிவங்களுக்கு 5 பத்துச்சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். மா. புவனேந்திரன், வர்த்தகக்கல்வி நிலையம், திருநெல்வேலி. 1698

CL 6000 பீந்திய வரிசை வைவேண்கார் முற்றிலும் திருத்தப்பட்டு மிகத்திறமையானநிலையில் உள்ளது. வஸ்தியாம்பிள்ளை, 186, பெரிய தெரு, யாழ்ப்பாணம். 1999

உடுப்புகள்
15-4-67 தொடக்கம் உடுப்புக்கள் ஓடருக்குத் தைத்துக்கொடுக்கப்படும். 19, ஓடை லேன், ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். 2379

மலர்கள்
சிங்கள-தமிழ்ப் புதுவருட வாழ்த்துக்கள். சகல மங்களவைபவங்களுக்கும் உரிய புத்தம் புதிய நுவரெலியா மலர்களும், விசேஷமாகக் கொண்டை மாலை, பூச்செண்டு, மலர் வளையங்களும் கிடைக்குமிடம்: பெர்னாண்டோ, நுவரெலியா பூ வியாபாரி, 35, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 2380

### தேவை

நிர்வாகப்பங்காளி:
நல்லமுறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பற்றறி சேவீஸுக்கும், பாட்ஸ் கடைக்கும் நிர்வாகப்பங்காளி தேவை. விபரங்களுக்கு V. சிங்கவேலு, 'பெற்ரோல் செட்', மருதனுமடம், சுன்னுகம். 1700

### நன்றி நவிலல்

1-4-67ல் நடைபெற்ற எமது திருமணத்தின்போது நேரில் சமுகந் தந்தவர்களுக்கும், அன்பளிப்புகள் வழங்கியவர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மா. வெற்றிவேல் — சகுந்தலா தேவி. தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

### வைத்தியம

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய ப[illegible] கொடிய வியாதிகள் குண[illegible]படுத்திய விபரங்கள் அட[illegible]கிய கற்றலோக் இனும். ம[illegible]திரிமார் மற்றும் பிரமுக[illegible]கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணா[illegible]ந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### அறிவித்தல்

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்தில் 14-4-67-ல் பரிசுபார்க்க இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு 1-5-67-ல் பரிசுபார்க்கப்படுமென்பதை அறியத் தருகிறோம்.

இங்ஙனம்,
நிர்வாகசபையினர்,
1089 ஆறுகால் மடம்.

### நடவடிக்கை எடுக்க உத்தரவு

கொழும்பு, வியாழன்
முடிக்குரிய காணிகளில் அத்துமீறிக் குடியேறியவர்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி காணி அதிபர் சகல அரசாங்க அதிபர்களையும் கேட்டுள்ளார்.

அத்துமீறிக்குடியேறியவர்களை அகற்றுவதற்கு இதுவரை காணி அதிபரின் உத்தரவில்லாது அரசாங்க அதிபர்கள் அதனைச் செயற்படுத்த முடியாதிருந்தது குறிப்பிடத்தக்கது.


**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எஸ். எஸ். ஆர்-விஜயகுமாரி
நடித்த
**காக்கும் கரங்கள்**

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ். எஸ். ஆர் -விஜயகுமாரி
நடித்த
**ஆனந்தி**

7-4-67 முதல்
**ஈஸ்வரன்**
[கிளிநொச்சி]
தினசரி 6-30, 9-30
எஸ். எஸ். ஆர். -விஜயகுமாரி
நடித்த
**ஆனந்தி** 1727

இப்பொழுது
திரையிடப்படுகிறது
**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
6-30, 9-30மணி. போயா தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் 4 காட்சிகள்
எம்.கே.ராதா-புஷ்பவல்லி
நடித்த
**சம்சாரம்**
புத்தம் புதிய கொப்பி

REGAL - JAFFNA
Yul Brynner &
Richard Widmark
in
**FLIGHT FROM ASHIYA**
Time: 4-15, 7-00 9-45 p. m.

3-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]
வெம்பிளி [கண்டி] மொடேன் [பதுளை] நியூசினிமா [குருனுகலை]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
கிங்ஸ்லி [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விளிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி
மனோகர், அசோகன், வசந்தா,
தங்கவேலு, மனோரமா, கருணாநிதி
மற்றும் பலர் நடிக்கும்
**இரு வல்லவர்கள்**

ரசிகப் பெருமக்கள்
அனைவருக்கும் எமது அன்புகலந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
**ராணி சினிமா**
(யாழ்ப்பாணம்)
வெற்றிமுரசு கொட்டும் 2 வது மாதம்!
- தமிழ்த் திரையுலகம் இதுவரைகாணாத பிரமாண்டமான காட்சி சோடனைகள்.
- கண்ணைக்கவரும் வர்ணப் படப்பிடிப்பு.
- நடிகர் திலகத்தின் உணர்ச்சியூட்டும் நடிப்பு.

சிவாஜி, ஜெமினி, முத்துராமன், நாகேஷ், சாவித்திரி,
ஜெயலலிதா, கே. ஆர். விஜயா, கே. பி. சுந்தராம்பாள்
நடித்த
**கந்தன் கருணை**
[ஈஸ்ட்மன் கலர்]

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
**ஆ. அப்பையா அன் கோ.,**
தலைமை ஸ்தாபனம்: 82, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம்: 54, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 506

கணபதி ஸ்ரோர்ஸ்
யானை மார்க்
**நல்லெண்ணெய்**
சுத்தமான இலங்கை எள்ளில்
சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்
சொந்தக்காரர்: கா. சு. கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்
18, கஸ்தூரியார்வீதி, [-] யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
உயர்ந்தரக ஜவுளிவகைகளைப் பெற்று
உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய
மறவாதீர்கள்
**கணேசானந்தாஸ்**
(முட்டாசுக் கடைச்சந்தி)
208, கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும் எமது புதுவருடவாழ்த்துகள்!
எங்களிடம்
பலசரக்கு சாமான்களும் பால்மா வகைகளும்
யானை மார்க்
சோடா, கேக், ஐஸ்பழம்
பேக்கன் (Bacon)
பால்சபையின் பால்வகைகள்
முதலியனவும்
மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.
**ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிரதர்ஸ்**
166, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
போன்: 308

இப்புதுவருட நன்னாளில்
எங்கள்
அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எங்கள் உளங்கனிந்த
புதுவருட வாழ்த்துக்கள்
**நா. துரையப்பா பத்தர் அன் சன்ஸ்**
நகை, வைர வியாபாரம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 7080

* கொடியேற்றமா!
* கோவில் திருவிழாவா!!
* கலியாண அலங்கரிப்புகளா!!!
எதற்கும் உகந்த
யாவரும் விரும்பும்
**செவ்வந்திப்பூக்கள்**
(CHRYSANTHUMS)
எம்மிடமுண்டு.
ஆடர்கள் உடன் கவனிக்கப்படும்.
உத்தரவாதமுடைய புகழ் பெற்ற பூ வியாபாரி
**எஸ். ஏ. பெர்னாண்டோ**
தபால்பெட்டி எண் 16,
நுவரெலியா. 1737


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!



சகலவிதமான
மின் சார
உபகரணங்களுக்கும்
எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

நியூரோன் எலெக்றிக்கல்ஸ்
(உரிமையாளர்: T. அழகரத்தினம்)
228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்! 7015

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
புதுவருட வாழ்த்துக்கள்
ஆ. நல்லதம்பி
[இரத்தினக்கல், நகை வியாபாரம்]
75, கன்னாதிட்டி யாழ்ப்பாணம்
போன்: 664

புதுவருட வாழ்த்துக்கள்
றேயல் டிஸ்பென்சரி
ஆஸ்பத்திரி வீதி; யாழ்ப்பாணம்.

எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
அலுமினியப் பாத்திரங்கள்
வாங்கும்போது
பேள்
மார்க்கைக் கவனித்து வாங்குங்கள்
PEARL METAL INDUSTRIES PEARL CEYLON
தயாரிப்பாளர்கள்
பேள் மெற்றல் இன்டஸ்றீஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[சுபாஸ் கபே முன்பாக]

எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!



கவர்ச்சியான படங்கள் பிடிக்க ஏற்ற ஸ்டுடியோ
போன்: 436 யாழ்ப்பாணம்.

# பாகிஸ்தானை மீண்டும் போருக்கு தூண்டும் முயற்சி

## அமெரிக்காமீது இந்தியா புகார்

புதுடில்லி, ஏப். 13

இந்தியத் துணைக் கண்டத்தில் மீண்டும் நெருக்கடியையும் அமைதியின்மையையும் ஏற்படுத்தக் கூடிய முறையில் அமெரிக்க அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது என்று இந்தியா தெரிவித்திருக்கிறது.

பாகிஸ்தான் மீண்டும் தனது இராணுவத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்கு அமெரிக்கா உதவியும் ஊக்கமும் அளிக்கிறது என்றும் இந்தியா கூறுகிறது.

அமெரிக்கா வழங்கிய இராணுவ சாதனங்களுக்கான உதிரி உறுப்புக்களை இந்தியாவும் பாகிஸ்தானும் அமெரிக்காவிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம் என அமெரிக்க அரசாங்கம் அறிவித்திருப்பதைத் தொடர்ந்தே இந்தியா மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளது.

இந்தியாவிடம் அமெரிக்க ஜெட்போர் விமானங்களோ நவீன யுத்த டாங்கிகளோ இல்லையென்று சுட்டிக் காட்டியுள்ள இந்தியா 1954-ம் ஆண்டுமுதல் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா யுத்த சாதனங்கள் வழங்கி வந்திருப்பதாகவும் 180 கோடி டாலர் பெறுமதியான பயங்கர ஆயுதங்களை வழங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது. 1965-ம் ஆண்டு இந்திய பாகிஸ்தான் சண்டையின் போது இந்த போர்ச் சாதனங்கள் பல சேதமடைந்ததாகவும் அவற்றைத் திருத்தி மீண்டும் பாகிஸ்தான் இராணுவத்தைப் பலப்படுத்தி போருக்குத் தயாராகச் செய்வதே அமெரிக்காவின் இந்த நடவடிக்கையாக இருக்கிறது என்றும் இந்தியா தெரிவித்திருக்கிறது.

அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் பெற்ற இராணுவ உதவியை இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் உபயோகித்திருப்பது அமெரிக்காவுக்கு நன்கு தெரியும் இனியும் பாகிஸ்தான் அந்த ஆயுதங்களை இந்தியாவுக்கு எதிராக உபயோகிக்கும் என்பதும் அமெரிக்கா அறிந்ததே. ஆயினும் ஆயுதங்களுக்கான உதிரிப் பாகங்களை வழங்க அமெரிக்கா முன்வந்திருப்பது இந்தியத் துணைக் கண்டத்தில் அமைதியின்மையும் நெருக்கடியையும் மீண்டும் ஏற்படுத்துவதே நோக்கமாக இருக்க வேண்டும் என்று இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இந்தியாவின் திகைப்பையும் சவலையையும் உத்தியோக பூர்வமான ஓர் அறிக்கை மூலம் இந்தியா தெரிவித்திருப்பதுடன் இந்தியாவிலுள்ள அமெரிக்க தூதர் மூலம் அமெரிக்க அரசாங்கத்துக்கும் தெரிவித்திருக்கிறது.

### 2000 டிராக்டர்கள் இறக்குமதி

கொழும்பு, வியா.

கமத்தொழில் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் 2000 டிராக்டர்களை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளது. விவசாயப் படையில் ஈடு [illegible] ர்கள் வழங்கப்படும்.

### அமெரிக்காவில் தஞ்சம்

நியுயோர்க், ஏப்.13

சீனாவிலிருந்து வெளியேறிச்சென்ற பிரபலசீனக்கலைஞர் அமெரிக்காவிடம் தஞ்சம் புகுந்துள்ளார். இவருக்கு அமெரிக்க அரசாங்கம் தஞ்சம் அளித்துள்ளது.

### புதிய அரசாங்க அதிபர்

கொழும்பு, வியா.

உள்ளூராட்சி ஆணையாளராக கடமையாற்றிய திரு. டபிள்யூ. ஜே. பெர்னாந்தோ கண்டி அரசாங்க அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கண்டியில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. மஹிந்தா விஜயநாயகா இலங்கை சிமெந்து கூட்டு ஸ்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### மக்கள் வங்கி கிளை நிறுவ கோரிக்கை

சங்கானை, வியா.

சங்கானையில் மக்கள் வங்கி நிலையமொன்றை நிறுவும்படி சங்கானை பட்டினசபைத் தலைவர் நிதி மந்திரியைக் கேட்டுள்ளார்.

நிதி மந்திரிக்கு தலைவர் எழுதிய கடிதத்தில் மக்கள் வங்கி நிறுவவேண்டிய அத்தியாவசியத்தை வலியுறுத்தி நிலையத்தை விரைவில் நிறுவி விவசாயிகளுக்கு உதவி புரியும்படி கேட்டுள்ளார்.

### கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

1956-ம் ஆண்டுக்குப் பின்பு அரசாங்க சேவையில் சேர்ந்த சில்லறை ஊழியர்களின் விஷயம் மேலும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனால் திருகோணமலையில் இம் மாதம் 17.ம் தேதி நடைபெறவிருந்த தமிழ்பேசும் அரசாங்க பொது ஊழியர்கள் சங்கத்தின் ஆதரவில் நடைபெறவிருந்த மொழிவழித் தொழிற்சங்கம் பிரதிநிதிகளின் விசேஷ கூட்டம் காலவரையின்றி பின் போடப்பட்டுள்ளது.

24-9-56க் குப்பின் அரசாங்கசேவையில் சேர்ந்த சில்லறை ஊழியர்களின் விஷயம் பரிசிலனை செய்ய ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், கடிதமூலம் சங்கத்தினருக்கு அறிவித்திருந்தார்.

### சிமெந்து தொழிற்சாலைக்கு வெற்றி

பலாலி, புதன்

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை கிரிக்கெட் கோஷ்டிக்கும் இளந்தமிழர் மன்றக் கோஷ்டிக்குமிடையில் நடேஸ்வராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சிமெந்துத் தொழிற்சாலை கோஷ்டி 1 விக்கெட்டும் 3 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

சிமெந்துத் தொழிற்சாலை கோஷ்டிக்கு எஸ். கனகராஜாவும் இளந்தமிழர் கோஷ்டிக்குகனகரத்தினமும் காப்டன்களாக விருந்தனர்.

### இராணுவ உதவி இனி இல்லை

வாஷிங்டன், ஏப்ரல் 13

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் தொடர்ந்து இராணுவ உதவி அளிப்பதில்லை என அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

1965-ம் ஆண்டில் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையில்சண்டைஏற்பட்டபோது இரு நாடுகளுக்கும் இராணுவ உதவி அளிப்பதை நிறுத்தி வைப்பதென்று அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்தது. இதன்படி 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ந் திகதியுடன் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் வழங்கப்பட்டு வந்த இராணுவ உதவி நிறுத்தப்பட்டது.

### கும்பாபிஷேகம்

கரவெட்டி, வியாழன்.

கரவெட்டி நுணுவில் பிள்ளையார் கோவில் மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 21,ந் திகதி வெள்ளிக்கிழமை வேதாரணிய சிவ ஸ்ரீ தியாகராஜக் குருக்கள் தலைமையில்நடைபெறும். இதனை அடுத்துவருடாந்தஉற்சவம் நடை பெறவிருக்கிறது.

### மஹோற்சவம்

சண்டிலிப்பாய், வியாழன்

சீரணி ஸ்ரீ நாகபூஷணி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 15-ந்திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் வரை நடைபெறும், மஹோற்சவ காலத்தில் தேவஸ்தானத்திலுள்ள ஆச்சிரமத்தில் மகேஸ்வர பூசைஇடம் பெறும்.

### இலங்கை ஒலிபரப்பு கூட்டு ஸ்தாபனம்

**வெள்ளி 14-4-67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 5-00 தேர்த்திருவிழா 6-40 இஸ்லாமியநற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 புதுவருட வாழ்த்துச் செய்தி, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள், 9-00 கவியரங்கம், 9-45 பக்திப்பாடல்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை. மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 தொழிலாளர் வேளை.

இரவு 6-15 பஜனை, 6-45 கிராம சஞ்சிகை, 7-15 முத்திநெறி—சைவ நற்சிந்தனை, 7-45 சமயப்பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை விழா அஞ்சல்—றேயல் கல்லூரி.

### கரபந்தாட்டம்

நாரந்தனை, வியாழன்.

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தாரால் நவரத்தினம் கேடயத்திற்காக நடாத்தப்படும் இரண்டாம் வருட கரபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் நாளை நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தமிழ், சிங்கள புது வருடப் பிறப்பையொட்டி 14-4-67 வெள்ளிக்கிழமை ஈழநாடு காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் 15-4-67 சனிக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

## மணிவாக்கு

ஒருவனது எண்ணத்திலும் செய்கையிலும தான் அவனின் எதிர்காலம் தங்கியுள்ளது. ஒருவன் தான் எண்ணுவது போல்தான் வாழ்வான். ஒருவனை உயர்த்துவதும் தாழ்த்துவதும் அவனேதான்.

— சுவாமி சிவானந்தா.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஷு
சித்திரை மீ 1வ. (14-4-67)


## இனிப்பும் கசப்பும்

இன்று பிலவங்க வருடம பிறக்கிறது. இந்துக்களுக்கு மட்டுமல்லாது இலங்கையில் வாழும் பௌத்தர்களுக்கும் இன்று புத்தாண்டு பிறக்கிறது. மூன்று தினங்களுக்குமுன்னர்தான் இஸ்லாமிய புதுவருடம் பிறந்தது இலங்கையைப் பொறுத்தவரையில் இன்று பிறக்கும் புத்தாண்டு தேசிய ஒற்றுமைக்கும் ஓர் எடுத்துக்காட்டு. பிலவங்க வருடத்தை 'வருக வருக' என வரவேற்போம்.

தமிழ்மொழி, கலை, கலாசாரம் ஆகியவைகளுக்கும் இந்து சமூகத்துக்கும் இன்னும் பலபல சோதனைகள் காத்திருக்கின்றன. இலங்கையின் இருபெரும் சமூகங்களுக்கிடையில் நிலவி வந்த வேற்றுமை குறைந்து படிப்படியாக ஒற்றுமை ஏற்பட்டுவரினும் இன்னும் இரு சமூகங்களுக்கிடையிலும் நிரந்தரமான நிலையான ஒற்றுமை ஏற்படவில்லை; சந்தேகமும் முற்ருக நீங்கவில்லை. நடந்து முடிந்த ஆண்டில் உணவுப் பிரச்னையே பெரும் பிரச்னையாக உருவெடுத்தது. இப்பிரச்னைக்குத் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை புதிய ஆண்டில் வெற்றிகரமாக நிறைவேறி நாட்டின் பிரசனைகள் ஓரளவரவது குறையுமென எதிர்பார்ப்போம்.

புதிய ஆண்டிலும் அரசியல் தலைவர்களிடையே முரண்பாடுகளும், அந்தரங்கமான சதிச் செயல்களும், விவசாயத் துறையில் பெருமுயற்சியும், அதிக பணச்செலவுகளும், கள்ளச்சந்தை வியாபாரமும், வாழ்க்கைச் செலவு அதிகரித்தலும் — என்று சோதிடர்கள் புத்தாண்டுப்பலன்கூறிப் பயமுறுத்துகின்றனர்.

புத்தாண்டு தினத்தில் வெல்லத்துடன் வேப்பந்துளிரும் கலந்து உண்பதும் விருந்தினர்களுக்கும் இதை வழங்குவதும்நமது சமுதாயத்தில் இன்றும் இருந்துவரும் பண்பாடு. இனிப்பும் கசப்பும், இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை, என்பதை உணர்த்துவது தான் இதன் அர்த்தம். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக மதித்து வாழவேண்டும் என்பதை இது உணர்த்துகிறது. சோதிடர்கள் பயமுறுத்தினுலும். இன்பத்தைக் கண்டுநிலைகொள்ளாது துள்ளாமலும் துன்பத்தைக்கண்டு சோர்வடையாமலும் இரண்டையும் சமமாக மதித்து வாழ்ந்தால், வாழ்க்கையில் சோர்வுக்கு இடமிருக்காது. புத்தாண்டில் நமக்கு சோதனைகள் ஏற்படக்கூடுமானுலும் எதையும் தாங்கும் இதயம் இருந்தால் எமக்கு இன்பமே சூழும்; எல்லோரும் வாழ்வோம்.

# புத்தாண்டுத் தூது

— திமிலைத்துமிலன் —

அன்ரெருநாள் பாடலுக்காய் அருகினிலே வந்தாள்
அவளருமைக் குரலினுக்கே அதையமைத்துத் தந்தேன்
வந்தொருநாள் பாடிவைத்தாள் வாகைமர நிழலில்
வானமுதம் தேனெழுகும் மழலைதரும் குரலில்
இந்துமுகம வண்டுவிழி இல்லையென்ற இடையாள்
இருண்டகுழல் திரண்டஎழில் இனியமலர்க் கொடியாள்
இன்ரெருநாள் அவளுளத்தின் இயல்புணரு கின்றேன்
இதயமடல் சித்திரத்தை மாற்றியமை யென்றேன்.

பாசமென்ற வயலினிலே பயிராவே னென்ருள்
பாபமிலை யானுலும் தாபமுள தென்றேன்
பேசவிலை ஊமையெனப் பின்நடந்து சென்ருள்
பிறகுமடல் வரையவிலை பேரமைதி கொண்டாள்
நேசமிலை யெனவுணர நெஞ்சுதுணிந் ததுவோ
நிலைமையவள் மனமுணர நீயுரைசெய் வண்டே
ஆசைமடல் புதுவருடத் தன்றுஅவள் வரைய
அழகுமணித் திருமகட்கு அறவுரைசெய் வண்டே.

# இன்று பிறக்கும் பிலவங்க வருடம்

## புத்தாண்டுப் பலாபலன்கள்

பிரம்மஸ்ரீ இ. சி. இரகுநாத ஐயரின் வாக்கிய பஞ்சாங்கப்படி. பிலவங்க வருஷம் இன்று காலை 6-24 மணிக்கு உதயமாகின்றது.

பராபவ வருஷம் பங்குனி மாதம் 30-ந்திகதி வியாழக்கிழமை பின் இரவு 2-24 மணிக்கு பூர்வபக்ஷ சதுர்த்தியில் ரோகிணி நக்ஷத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் மகர லக்கினத்தில கன்னி நவாம்சத்தில் சனி கால வேளையில் புதிய இப் பிலவங்க வருஷம் உதயமாகின்றது.

இப் புண்ணிய காலத்தில் முறைப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் வேப்பிலையும் காலில் கொன்றையிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து மஞ்சள் நிறமுடைய படடாயினும, மஞ்சட்கரை, கறுட்புக்கரை சேர்ந்த ஆடையாயினும் தரித்து நறுமலர் சூடி இறை வழிபாடு இயற்றி, தான தருமம் செய்து, பெரியோரை வணங்கி, அறுசுவை உண்டு சமய நூல்களைப் பாராயணம் செய்து மங்களகரமாகச் சயனஞ்செய்ய வேண்டுமெனவும் வாக்கிய பஞ்சாங்கம் கூறுகின்றது.

கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி மிருகசீரிடம் 1-ம், 2-ம் கால்கள், அத்தம், சித்திரை 3-ம், 4-ம் கால்கள், சுவாதி, விசாகம் 1-ம், 2-ம், 3-ம், கால்கள், திருவோணம் இவற்றில் பிறந்தோர் தவருது தான தருமவழிபாடுகள் விசேடமாகச் செய்யவேண்டுமென வும் 'வாக்கியம்' வலியுத்துகின்றது.

திருக்கணிதப் பஞ்சாங்கப்படி பிலவங்க வருஷம் சித்திரை மாதம் 13-ம்திகதி வெள்ளிக்கிழமை காலை 6-20 மணிக்கு உதயமகின்றது இலக்கினம் மேடம் நக்ஷத்திரம் ரோகிணி. முதல் நாள் இரவு 2-20 மணி தொடக்கம் அன்று பகல் 10 20 மணிவரை விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் சகலரும் மருத்துநீர் தேய்த்து தலையில் புங்கமிலையும் காலில் ஆலிலையும் வைத்து ஸ்நானஞ் செய்ய வேண்டுமெனவும், வைரம் பதிக்கப்பட்ட ஆபரணங்கள் அணிந்து தேவாராதன தரிசனங்கள் செய்து, சூரிய பொங்கல் செய்து பூஜை செய்து இயன்ற தான தருமங்கள் செய்து அறுசுவைப் பதார்த்தங்களை போஜனம் செய்து மங்கலப் பொருட்களைத் தரிசித்தும் வாழக் கடவர்கள் எனத் திருக்கணிதம் கூறுகிறது.

# புதியன படைப்போம்!

— இ. நாகராஜன் —

போனதெல்லாம் போகட்டும் புத்துணர்வு
பூத்திளமை
ஆன கலைபடைக்க ஆர்வம் உளத்துந்த
ஞானம் நிலவ எழில் நாடி நெறிசிறக்க
ஆன புதுவருடத் தாக்கம் பலபடைப்போம்.

நேற்றைக் கிருந்தவற்றுள் நீங்கும் சில பின்பு
போற்றிப் புகழவல்ல புதுமை புகுந்துளத்தை
மாற்றும், நியதியுண்டு! ஆனுல் மறைந்தவற்றுள்
ஏற்றும் பலஉண்மை இருக்கும் நிலைகாண்போம்.

ஓடி மறைகின்ற ஓராண்டு மெல்லமெல்ல
நாடிப் பொழுதாகி, நாளாய்ப்பின், வாரமென
ஓடி ஒழிந்தேபின், ஓர்மாதம் ஆகியவை
கூடிப்பன் னிரண்டாகி கூறும் ஒரு ஆண்டாய்
ஆகும், அதற்குள்ளே ஆனஅற்பச் செய்கையினுல்
நோகும் மனம்பின்னே, நோவை மறந்தின்பம்
காணும், களிப்பதுவும் காலத்தோ டேகூப்பின்
தோணும் துடிப்பெல்லாம் சூத்திரத்தின்
சக்கரம்போல்
கூடிச் சுழல்வதனைக் குவலயத்தே கண்டபின்னும்
தேடி யெதையெதையோ செய்ய முனைகின்ருேம்!

போன தொருவாண்டு போனதுதான் ஆனுலும்
ஏனே அதுதந்த ஏற்றம் சிலஎமக்கு
ஞானம் பயப்பதனை நாட்டினிலே நாம்மறந்து
ஈனம் புரிகின்ருேம், அதைவிட்டே எப்போதும்

போனபுதுமையினைப் பொய்யென்று தள்ளாது
ஆன பழமையிலும் அறிவுண்டாம் என்ருேர்ந்து
செய்யும் பலசெயலில் சிறந்தபல ஆக்கத்தை
வையம் உயர்வதற்கே வழங்கிடவே
வேண்டுமன்ருே.

கோழி குரல்கொடுக்க, கோட்டான் கரந்துறைய
ஆழித் துயல்நீத்து ஆதவனுர் வானத்தில்
சூழும் இருள்நீக்கச் சுடரேந்தி தோன்றுகையில்
நாளில் புதுமையொன்று நமக்காய் விடிகையிலே
கோவில் மணியொலிக்கும், குருகினங்கள்
பாவிசைக்கும்
நாவில் சிவன்நாமம் நயந்தொலிக்க நாமெல்லாம்
எல்லாம் அவனுகி இல்லா இடமின்றி
வல்லானுய் மட்டற்ற வளங்காட்டி வாழ்விக்கும்
ஆண்டவனை நெஞ்சத்தே அமைய வழிபட்டே
வேண்டும் வளம்பெற்று வினைகள் பலபுரிவோம்.
புத்துலகம் போற்றும் புதுமைக் கலைப்படைத்தே
எத்திசையும் எமையேற்றி என்றும் புகழவல்ல
ஞானக் கலைபடைப்போம், நாட்டவரின் உள்ளத்தின்
மோனங் கலைந்துவரும் மோதுங் கொடுமைகளை
நீக்கி நெறிகாட்டி நிலைக்கும் அமைதியினை
ஆக்க வழிகாண்போம், அதையென்றும்முன்னவர்கள்
காத்து வழிகாத்து காலமெலாம் கைக்கொண்டு
ஏத்த வழிசெய்வோம் இன்பம் பொலிய வைப்போம்.

நாம்மட்டும் வாழாது நாட்டோர் அனைவருக்கும்
ஆம்மட்டும் நாமுழைப்போம் அன்பை உழைப்
[போடே
ஊட்டி, உயிர்சிறக்க உண்மை நெறிசிறக்க
வாட்டும் கொடுமைகளை வடித்துத் துடைத்தகற்றி
தேட்டம் அதுதெய்வச் சிந்தையெனச் செப்பிநின்றே
காட்டும் எமதுகலைக் கற்பனைகள் எப்போதும்
நான்எனதென் றெண்ணுகின்ற நலிவுக் குரித்தான
ஞானச் செயல்விட்டு உலகத்தே எல்லோர்க்கும்
ஒன்ருய் உதவுகின்ற உயரியமா செய்கையினில்
நின்று நிலைக்க [illegible] சாலே செய்வோமே.

## புதுவருடமும் புதுப்பஞ்சாங்கமும்

கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப்பருவங்களை ஆறுக நவின்றனர் நம்முன்னேர். ஆவணி, புரட்டாதி கார் காலம், ஐப்பசி, கார்த்திகை கூதிர்காலம், மார்கழி தை முன்பனி, மாசி, பங்குனி பின்பனி, சித்திரை வைகாசி இளவேனில், ஆனியும் ஆடியும் முதுவேனில் எனக் கூறினூர்கள். பருவகாலத்தை இவ்வாறு வகுத்தமைத்தது போல நிலத்தையும் காலத்தையும் தூரத்தையும் மக்கள் தொகுதியையும் வகுத்துத் தரப்படுத்தினர்.

சித்திரை ஆண்டு புதுவருடப்பஞ்சாங்கத்தை வைத்துப் புரட்டிக்கொண்டிருந்த போதுதான் ஏதோ இப்படி நினைவு ஓடியது. ஒவ்வொரு நாளும் உதயமாகும் சூரியன் புதுப்புதுச் சூரியனுகத் தோன்றிப் புதிய புதிய நாளாகப் பொழுது விடிவதைப் போல்தானே இந்தப் புது வருஷமும், பருவகாலங்களும் அன்று முதல் இன்று வரை மனம் சலித்துப்போகாத புதுமையுடனே சுழன்றுவந்து போய்க் கொண்டிருக்கின்றன.

மஞ்சளும் குங்குமமாகப் பொலியும் புதுப் பஞ்சாங்கத்தைக் கையில் எடுத்த மாத்மரத்திலேயே மனதில் ஒரு சந்தோஷம் உண்டாகிறது. வரப்போகும் ஒருமுழு ஆண்டின் கதையல்லவோ பக்கத்துக்குப்பக்கம் வரிக்கு வரி எழுதிக்கிடக்கிறது, அதனுல்தானே?

கோவில் உற்சவங்கள் பண்டிகை, பெருநாள், கல்யாண முகூர்த்தங்கள், புதுமனை கட்ட, குடிபுக நாள் நடசத்திரம், வீடுவேய, நாற்று விதைக்க, புதிர் எடுக்க, பொங்கலிட பசை போட, விருந்துண்ண எல்லாமே சுபமங்களமான காரியங்கள் தாம். போன வருடமும் அதற்கு முந்திய வருடமும் அதற்கு முன்னமும் அதற்கு முன்னமும் சென்றுமறைந்த ஆண்டுகளில் நிகழ்ந்த அதே உற்சவம், அதே பண்டிகை, அதே திருநாள். ஆனுலும் என்ன, சித்திரை ஆண்டுப் பிறப்பு நெருங்கிவர புதுப் பஞ்சாங்கம் தேடிப்போய் வாங்கிக்கொண்டுவந்து பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு நாளாந்தம் அதை எடுத்துப் புரட்டிப்பார்த்துக்கொண்டுதானிருக்கிருேம். போயாதினக் குளறுபடியும் குழப்பமும் கூடப் புதுப்பஞ்சாங்கம் ஒன்று கைவசமிருந்தால் உதயசூரியனைக்கண்ட பனிபோலப் பறந்துவிடுகிறது.

ஒவ்வோராண்டும் பிறக்கும் சித்திரை வருஷம் இளவேனில் காலத்தை மட்டுமின்றிப் புதுப்பஞ்சாங்கத்தையும் கூடவே கொணர்ந்து நம்மை மகிழ்விக்கிறது.

காவியமும் ஓவியமும்
களியாட்ட இன்பமும்
கன்னி நீ கொண்டு
வருவாய்

என்று கவிஞர் ஒருவர் வரவேற்பதுபோல் புத்தாண்டையும் இளவேனிலையும் புதுப்பஞ்சாங்கத்தையும்வரவேற்போம்.

''தம்பி இன்றைக்குஎன்ன கிழமை?''

''இன்றைக்கு போயாவுக்கு அடுத்த முதல்நாள், நாளைக்கு இரண்டாம் நாள், அதன்பின் மூன்ரும்நாள்.''


''ஐயோ போய் பஞ்சாங்கத்தை எடுத்துப்பாரடா. அருமையான கிழமை நாட்களின் பெயர்கூடவா உனக்கு மறந்துபோய்விட்டது?''

''போய்யா. நான் பந்தடிக்கப்போகிறேன்.''

— கதிரவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருஜினி ரேடியோ
ஸ்தாபனத்தாரின் புதுவருட வாழ்த்துக்கள்
RAJINEE RADIOS
Specialist in Electronics
ரேடியோ, மின்சார உபகரணங்கள் திருத்துபவர்கள்
15/15, Power House Road, 15/15, மின்சார நிலைய வீதி.
Jaffna. யாழ்ப்பாணம்.



தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
[நூதனசாலைக்கு முன்பாக]

வாடிக்கைக்காரர்களுக்கும் அன்பர்களுக்கும்
எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
V.K. இராசரத்தினம்
(ரேடியோ விற்பனையாளர்களும் திருத்துபவர்களும்)
11/5, ஸ்ரான்லி ரோட் — யாழ்ப்பாணம்.

திருச்செல்வம் அன் கோ
விவசாயிகளுக்கு ஏற்ற திடகாத்திரமான
போட் டிருக்ரர் மொடல் 2000, 3000 5000
வாங்கி
கமத்தொழிலை, பிரதானமாய் நெற்செய்கையை
விருத்திசெய்யுங்கள்.
மிகவும் திறமையான காத்திரமுள்ள
"கல்டர்" தமிழ் ரயிப் றயிற்றர்கள்,
மோட்டர்போட் எஞ்சின், லிஸ்ரர்,
புக்எவன்றூட்மோட்டர், அல்க்கன், லிஸ்ரர்
பம்புகள்
[சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

நகைச்சுவைச் சித்திரம்

# புத்தாண்டு வாக்குறுதிகள்

— எஸ். கே. சுந்தரகுமாரன் —

"இந்த வருஷம் எதை விடுவதாக யோசித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே வந்தாள் என் சம்சாரம். எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. [நானென்றும் பெண்டாட்டிக்குப் பயந்த ஆத்மா இல்லை, நான் பதில் சொல்லாமலிருந்ததற்குக் காரணம் வேறு] திடீரென்று, ஏன் "உனக்கு மட்டும் எதையாவது விடுகிற யோசனை இல்லையாக்கும்?!" என்று கேள்வி கேட்டு மடக்கிவிடப் பார்த்தேன். பெண்களாவது மடங்குவதாவது, அதுவும் வருஷப் பிறப்பு நாளன்று மடங்கிப் போனால் வாழ்நாள் முழுவதும் மடங்கிப்போகவேண்டி வந்துவிடுமே யென்றுமொரு எண்ணம். அதனாற்றான் போலும் 'சடக்'கென்று பதில் சொன்னாள்:

"ஏன்... நான் சொல்லி ஏதாவது செய்து முடிக்காமல் விட்டது உண்டா?"

"தாயே பராசக்தி..." நான் விஷமத்துடன் சொன்னேன், "சென்ற வருஷப் பிறப்புக்குச் சொன்னாயே, இந்த வருஷம் நகைக் கடைக்குப் போவதில்லையென்று... அது எந்த அளவிற்கு உண்மையாயிற்று;"

அவளுடைய முகம் எனது குறுக்குவிசாரணையால் சற்றும் வாடியதாகத் தெரியவில்லை. பதிலாகப் 'பாயின்ட்ஸ்' அகப்பட்ட வக்கீலைப்போல, "நான் இன்றுவரை போனேனா.. எல்லாம் நீங்கள் தான் போய் வாங்கிக்கொண்டு வந்தீர்களாக்கும்... நான் கடைப்பக்கம் தலையைக் கூடக் காட்டவில்லை!" என்று பளிச்சென்று சொன்னாள்.

"நீ தான் தலைகாட்டவில்லையே தவிர உன்னுடைய சகல ஆபரணங்களும் புது ஆபரணங்கள் செய்ய அளவெடுக்கப்படுவதற்காகத் தினந்தினம் தலைகாட்டிக்கொண்டிருக்கத் தான் செய்தன... ஒரு நாள் தோடு... ஒரு நாள் 'நெக்லெஸ்'...ஒருநாள் மூக்கு.." நான் இன்னும் தேடும்போதே அவள் 'புல்ஸ்டொப்' போட்டாள்: "ஒன்று கேட்கிறேன்!"

"என்ன?"

"நான் வராததால் நீங்கள் விரும்பினால் வாங்காமல் வந்திருக்கலாமே!?"

"இருக்கலாம். . ஆனால் நகை வாங்காமல்நான் வீடு வந்தால் நீ தான் உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பித்து விடுகிறாயே... உப்பில்லாத பண்டத்தத உண்டு எத்தனை நாட்களுக்கு நான் உயிரோடிருப்பேன்?"

"நன்றாகப் பேசுகிறீர்கள்?" — உண்மை உடைபடுவதை உணர்ந்தவள் எனக்கு உடனே ஒரு குரலுக்கான 'சேர்டிபிகேட்' தந்துவிட்டுத் தொடர்ந்தாள், நீங்கள் தான் புகைப்பதை விடுவதாகச் சொன்னீர்களே.. ஆனால் நடந்ததென்ன, தினமும் 'ஆபீஸ் ரூமில்' யாககுண்டம் தான்."


"சேச்சே... இந்த வருஷம் நான் எதத்தனைதடவை புகைப்பதை விட்டிருக்கிறேனென்று உனக்குத் தெரியாமையினால் இப்படிச் சொல்கிறாய்... நான் புகைப்பதாகச் சொன்னேனா?... இல்லையில்லை... புகைப்பதை விடுவதாகத்தானே சொன்னேன், புகைப்பதை ஆரம்பிக்கமாட்டேனென்று கூறவில்லையே"— நான் ஏதோ சமாளித்துத் தள்ளினேன்.

'நீங்கள் ஓர் அரசியல் தலைவராக வந்திருக்கவேண்டும். தவறிப்போய்விட்டது. சமயத்திற்கு ஏற்றாற்போலப் பேசுகிறீர்கள்... போகட்டும், விடுதலை நாட்களில் சினிமாவுக்கு அழைத்துப் போவதாக வாக்குறுதி கொடுத்தீர்களே... கடைசியில் அதுவும் தேர்தல் வாக்குறுதிதானோ?"

நான் திடீரென்று உச்சஸ்தாயியில் [உண்மையை மழுப்ப நான் பாவிக்கும் ஒரேயொரு கைகண்ட அஸ்திரம்] சொன்னேன், அலறினேன். 'நான்தான் சம்பளத்தைச் சுளையாக உன்னிடம் கொண்டுவந்து தந்துவிடுகிறேனே... பிறகு நீயல்லவா என்னைக் கூட்டிக் கொண்டுபோகவேண்டும்."

[8-ம் பக்கம்பார்க்க]

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
பேக்கின்ஸ் (PERKINS)
மோட்டார் வள்ள யந்திரமும்
அதன் உப-உறுப்புக்களும்
மற்றும்
மோட்டார் வாகன யந்திர
உதிரிப்பாகங்களும், எல்லா வகையான
றேடியேட்டர்களும் விற்பனைசெய்யும்
ஸ்தாபனம்
சமுத்திரா திரேட்ஸ் லிமிட்.,
223,2 ஸ்ரான்லி ரோட், — யாழ்ப்பாணம்.
போன்: 7236



அதிக வனப்பும்
எழிலும்
லாவண்ணியமும்
பெற
பொன்ட்ஸ்
வனிஷிங் கிறீம்

உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமத்தைப் பாதுகாத்து, சோபை யூட்டி நாளுக்கு நாள் அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொண்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.





அழகெனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட
பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

Sonnenschein

நீடித்து உழைப்பது



சோனென்ஷீன்

பற்றறி ஒன்றே

ஜேர்மன் தயாரிப்பு

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி ரேட், — யாழ்ப்பாணம்.

# விஞ்ஞானத்தில் வெற்றி சமாதானத்தில் விருத்தி இன்று பிறக்கும் பிலவங்க வருஷ பலன்

— சோதிடக் கலாநிதி க. வேலுப்பிள்ளை —

பராபவவருஷம் பங்குனி மாதம் 30-ம்தேதி வியாழக்கிழமை பின்னிரவு 2மணி24 நிமிஷத்தில் 14-4-67) மலரவிருக்கும் பிலவங்க வருஷத்தின் பலாபலன்கள்:-

**பொதுநோக்கு**

தானியாதிபதி சனி, புதன் நீஷனோடுகூடி, இரஸாதிபதி செவ்வாயைப்பார்க்க உலகின் நாடுகளைப் பொறுத்த வரையில் இயந்திரவளர்ச்சி தானியவிருத்தி, உள்நாட்டுப் பூசல்கள் இருப்பினும் சமாதானத்துறையில் அபிவிருத்தி, சமயத்துறையில் ஆர்வமேற்படல், விஞ்ஞானத்துறையில் புதிய வெற்றிகள், பின்தங்கிய நாடுகளுக்குப்பொருளாதர உதவிகள், தொழிலாளர் மத்தியில் ஒற்றுமைக்குறைவு, அரசியல்-ஆத்மீகம் சம்பந்தப்பட்ட சில தலைவர்களின் திடீர்மறைவுகள், இயற்கையின் உபாதைகள். மேலும் சிலநாடுகளில் இராணுவத்தினரின் கை பலப்படுதல், கலைஞர்களின் வாழ்க்கையில் கசப்பான நிகழ்ச்சிகள். அரசியலில் எதிர்பாராத திருப்பங்கள், அகால மரணங்கள் அதிகரித்தல், சுகாதாரத் துறையில்புதியதொல்லைகள் சிசுமரணங்கள் கூடுதல், மாதர் உலகத்தில் எதிர்பாராத தாக்குதல்கள். சிறிய தீ விபத்துக்கள் ஆதியன உண்டாம்.

**அமெரிக்கா**

அமெரிக்காவைப்பொறுத்தவரையில் அதன் அன்னிய நாடுகளின் உறவில் புதிய திருப்பமும், எரிபொருள் விருத்தியும், இயந்திரங்களின் பெருக்கமும், உதவியின்பெயரால் ஆயுதவியாபாரமும், உள்நாட்டு அரசியலில் அமைதியின்மையும், விண்வெளிப்பயணத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் ருஷ்யாவுடன் உறவுமுறையில்சுமுகமான நிலை உருவாகுவதுமுண்டு.

**ருஷ்யா**

நீரஸாதிபதி சூரியன் உச்சமாக ராகுகூடி, கேதுபார்க்க ருஷ்ய-சீனு உறவில் மேலும் விரிசல்கள்ஏற்படலாம் எனினும் இருநாடுகளும் ஒன்றுடன்ஒன்று மோதிக்கொள்ளுவதற்கு இடமேற்பட முடியாது. ருஷ்யாவில் சமாதானத்துறையில் மேலும் ஆர்வமும், விஞ்ஞானத்துறையில் துரித முன்னேற்றமும், விண்வெளிப் போட்டிகளில் தொடர்ந்து முதலிடமும், மருத்துவத்துறையில் புதிய கண்டுபிடிப்புக்களும், உள்நாட்டு அரசியலில் அமைதியும், உலகநாடுகளில் அதன் செல்வாக்கு விருத்தியடைதலும் உண்டாம்.

**இங்கிலாந்து**

மந்திரி சுக்கிரன் இராஜா சந்திரன்கூடி ஆட்சி உச்சமாக 5-ம்இடம் திரிகோணஸ்தானத்தில் இருக்க, இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் அயல்நாடுகளுடன் சிநேகபூர்வமான தொடர்புகளுக்கு இடமுண்டு. மாட்சிமைதாங்கிய மகாராணியின் ஆட்சியில் மாதர்கள் போற்றப்படுவர். தொழிற்கட்சியின் செல்வாக்கு மேலும் பரவுவதற்கும் இடமுண்டு.

**பாரதம் - பாகிஸ்தான்-சீனு நிலைமை**

அர்த்தாதிபதி வியாழன் உச்சம் பெற, அவ்வீட்டதிபன் ஸஸ்யாதிபதி சந்திரன் மந்திரி சுக்கிரன் கூடி அசுர குரு சந்திரோதயம் பெற்று ஆட்சி உச்சமாக அமைய, பாரதத்தைப் பொறுத்த வரையில் பாகிஸ்தான்-சீனு ஆகியவற்றுடன் எல்லைத்தகராறுகள் தொடர்ந்து இருப்பினும் சிறு சிறு சச்சரவுகளுடன் முடிவடையுமேயல்லாது பெரிய விளைவுகள் ஏற்பட முடியாது. குறிப்பிட்ட நாடுகளின் தலைமைப் பீடங்களுக்கும் இதுவொரு சோதனை காலமாகும். பாரதத்தில் மேலும் காங்கிரஸ் கட்சியில் கருத்து வேற்றுமைகளுக்கு இடமுண்டு. எனினும் மத்திய ஆட்சியில் மாற்றத்துக்கு இடமில்லை. தமிழ்கத்தைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் கூட்டணிக்குமிடையில் சிறிய அளவில் அபிப்பிராய பேதம் ஏற்படினும், அதன் ஆட்சி வலுவுள்ளதாகவே இருக்கும். தி. மு. க.வின் ஆட்சியின்கீழ் அடுத்துள்ள மாநிலங்களுடன் அதிக உறவும், தமிழ் மொழி போற்றப்படுவதும், தன தானிய விருத்தியும், மாற்றுக்கருத்துடையவர்கள் மத்தியில்கூட மன மாற்றங்கள்ஏற்படுவதற்கும் இடமுண்டு.

**இலங்கை**

நீரஸாதிபதி சூரியன் ராகு கூட, இரஸாதிபதி செவ்வாய் அட்டமப் பார்வையாக நோக்க, தானியாதிபதி சனி புதன் நீஷன்கூடி இரஸாதிபதி செவ்வாய் பார்க்க நமது நாட்டைப் பொறுத்தவரையில், பிற நாடுகளில் இலங்கையின் செல்வாக்கு வளர்ச்சி பெறினும், உள்நாட்டு அரசியலில் அதன் செல்வாக்குக் கட்டுப் படுத்தப்படலாம். பொரு

(7-ம் பக்கம் பார்க்க]

மோட்டார்வண்டி உரிமையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

உங்கள் மோட்டார் வண்டிகளுக்கு வரும் பிழைகளுக்கு குறைந்த செலவில் குறுகிய காலத்தில் நம்பிக்கையும் உத்தரவாதமும் தரக்கூடிய சிறந்த சேவைக்கும்

**வண்டிகள் விற்கவோ அல்லது வாங்கவோவேண்டுமா?**

இன்றே நாடுங்கள்

**வின்ஸ்லோஸ்**

**ஓட்டோ மோபைல் என்ஜினியர்ஸ்**

மின்சாரநிலைய வீதி, [போன் 269] யாழ்ப்பாணம்.

**WINSLOWS Automobile Engineers**

Power House Road, Jaffna.

பொறியியல், தொழில்நுட்ப வல்லுநர்களின் மேற்பார்வையில் பயிற்றப்பட்ட திறமைவாய்ந்த உதவியாட்களின் உதவியுடன் சிறந்த சேவை செய்துவருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

தெய்வ வழிபாட்டிற்கும் உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்யவும்



**சண்முகாஜவ்வாது**

பத்திகளை உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

**ஆ. இராசையா அன் சன்ஸ்**

69, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்.


புனிதமான புதிய ஆண்டை உங்களுடன் நாமும் சேர்ந்து வரவேற்று

எல்லோரும் இன்புற்று வாழ இறைவனை வணங்குவோமாக!

**விநாயகம் இன்டஸ்ரீஸ்**

(விநாயகம் நெல்லி ரச தயாரிப்பாளர்கள்)

39, மணிக்கூட்டு வீதி — யாழ்ப்பாணம்.



அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

**ஈஸ்வர் கோப்பரேஷன்**

[றேடியோ உப-உறுப்புக்கள் இறக்குமதியாளர்கள்]

18, ஸ்ரான்லி ரேட், -- யாழ்ப்பாணம்.

எமது ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

எங்களிடம் டயர்களை நேரில் தந்து புதுப்பிப்பவர்களுக்கு இலவசமாக டயர்களை மாற்றிக் கொடுப்பதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்திருக்கின்றோம்

என்பதை இப்புத்தாண்டு தினத்தில் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நோர்தேண் இன்டஸ்ட்ரீஸ்**

(உத்தரவாதத்துடன் டயர் நிரப்புபவர்கள்)

8/1, ஸ்ரான்லி வீதி, :- யாழ்ப்...

மலிவு விற்பனை

வாசகப் பிரியர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

ரூபா 2,00,000/-க்குப் பெறுமதியான

**தமிழ்-ஆங்கில நூல்கள்**

[பழமையானவை] எம்மிடம் உள்ளன. அவற்றை அரை விலைக்குக் கொடுக்க உத்தேசித்துள்ளோம்

வாசிகசாலைகளுக்கும், கல்வி ஸ்தாபனங்களுக்கும் தகுந்த கழிவு கொடுக்கப்படும்

நூல்கள் தேவையானவர்கள் எம்மிடம் தொடர்புகொள்ளுங்கள்

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**

234, K. K. S, வீதி, யாழ்ப்பாணம்.

PHONE NO: 569

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானத்தில்..

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

ளாதாரத்துறையில் சிநேக நாடுகளின் ஆதரவுகளுக்கு இடமுண்டு. விவசாயத்து றையில் முன்னேற்றமும், அதிக விளைச்சலும், உணவு நெருக்கடி தளர்ச்சியடைவ தற்கும்இடமுண்டு. 6-9-67ல் மாற்றமடையும் அர்க்காதி பதி வியாழன் நமது நாட் டின் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்குச் சோதனை காலமாகும். தேசிய அர சாங்கத்தில் அங்கம்வகிக்கும் இரண்டு பிரதான கட்சிக ளின் உறவுமுறைகளில் நலிவு தோன்றினுல்கூட, பெரிய மாறுதல்களுக்கு இடமிருக்கமுடியாது. எதிர்க் கட்சிகளைப் பொறுத்தவரை யில் அவைகளின் செல்வா க்கு வளர்ச்சியடைவதாகத் தோன்றினுலும்கூட அதிக ஆதரவுக்கு இடமேற்பட முடியாது. பொதுமக்களைப் பொறுத்தவரையில், விபத் துக்கள் அதிகரித்தலும், அகலா மரணங்கள் கூடுத லும், நூதன ரோகங்கள் தலைதூக்குதலும், தொழிலா ளர்களுக்கிடையில் குழப்ப நிலையும், ஆசிரியர்களுக்கு மத்தியில் அதிருப்தியும், மாதர்களுக்கு மந்தநிலையும், மனக்கசப்பான சம்பவங்கள் நடைபெறுதலும், சமயத் துறையில் அதிகநாட்டமும், தமிழ் பேசும் மக்களுக்கிடை யில் புதிய மாறுதல்களும் உருவாகலாம்.

## "ஆங்கிலத்தில் வேண்டும்"

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராமசபை வரு மானவரி ஓவசியர் திரு. கே. எம். சி. அசிஸ், கிராமசபை சட்டத்துக் கமையவாகனம், கடைவரிகள் கட்டாதவர் கள் மேல்வழக்குத் தாக்கல் செய்வதற்காக தமிழ்மொழி யில் எழுதப்பட்ட படிவங் களைகிராமசபைத் தலைவரின் தமிழ்மொழி கையொப்பங் களுடன் வழமைபோல் சங் கானையிலுள்ளகிராமக்கோர் ட்டுக்கு எடுத்துச்சென்ருர். தமிழ்மொழியில் எழுதப்ப ட்ட பத்திரங்களை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் ஆங்கிலமொழியில் எழுதிக் கொண்டுவரும்படியும்கிராம கோர்ட் நீதிபதி ஜோன்பற் றிக் உத்தரவிட்டார்.

கடந்த காலங்களில் தமிழ் மொழியில்தான் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வந் தனஎன்பதை ஓவசியர்நீதிப திக்குச்சுட்டி காட்டினர்இவ் வழக்கைநடத்தும் ஓவசிய ருக்குஆங்கில மொழிதெரி யாதுஎன்பது குறிப்பிடத் தக்கது.

---

அனுராதபுரம், வியாழன்.

மதவாச்சியில் நடை பெற்ற கோஷ்டிக் கொள்ளை வழக்கு தாக்கல் செய்வது சம்பந்தமாக மேலும் அவ காசம் வேண்டுமென பொலிஸ் அனுராதபுரம் மாஜிஸ்திரேட்டைக் கேட்டு ள்ளனர். ஏப்ரல் 26-ந் திகதி வரை விசாரணை நடத்த அவகாசம் வேண்டுமென பொலிஸ் அதிபர் திரு. ரி. ரி. தனபாலா தெரிவிதுள்ளார்


# கமலா பீடி

எல்லோரும் விரும்புவதும்
எங்கும் கிடைப்பதும்

## கமலா பீடி

சுறுசுறுப்பையும், உற்சாகத்தையும் கொடுப்பதும்
பாட்டாளி முதல் பணக்காரர்வரை புகைத்து மகிழ்வதும்
உள்நாட்டுக் கைத்தொழிலை ஊக்குவிப்பதும்
உங்களுக்கு புகை இன்பத்தைத் தருவதும்


## கமலா பீடிகளே

## கமலா பீடி

சங்கமித்த மாவத்தை, கொழும்பு.

டெலிபோன்: 6522






லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய அதி பிரசித்த பால் தயாரிப்புத் தொழிற்சாலையிலிருந்து வருகிறது. ஹாலந்தின் அதிகபட்ச அபிமானம் மிகுந்த இதில் 28 சத விகிதம் பாற் கொழுப்பும் 26.7 சத விகிதம் புரதச் சத்தும் உண்டு.

லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், உண்மையான முதற்றர பூரண ஆடைப்பால் தர வேண்டிய அனைத்தையும் தருகிறது; இருந்தும், வேறெந்த ரகப் பவுடரையும் விடக் குறைவான நியாய விலையில் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஏக விநியோகஸ்தர்கள்

## மில்லர்ஸ்

லிமிட்டெட்.



நண்பர்கட்கும்
அன்பர்கட்கும் ஆதரவாளர்கட்கும்
எம் இதயம் கனிந்த
புதுவருட வாழ்த்துக்கள்

## ஏ. கே. எஸ். அன் ஸன்ஸ்

நகைமாளிகை
யாழ்ப்பாணம்

ஈழத்திருநாட்டின் ஈடு இணையற்ற ஸ்தாபனம்!
அரைநூற்றுண்டின் அரிய சேவையால்
உங்கள் பேராதரவைத் தேடிக்கொண்ட

## வைர நகை வியாபாரிகள்





அன்பர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்

எமது உளங்கனிந்த

# புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

இன்றுபோல் என்றும்
உங்கள்
ஆதரவை நாடும்

## ராஜ்கோபால்ஸ்

ஸ்தாபனத்தார்

36/1, பெரியகடை — யாழ்ப்பாணம்

போன்: ————— 7168


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு . . .

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

''பிறகேன் இயலாத காரியத்துக்கு வாக்குறுதி கொடுத்தீர்களாம்!'' அவள்என்னை வசமாகப்பிடித்துக் கொண்டாள்.

''நாஞ கொடுத்தேன்? நீயல்லவா வாங்கினுய்!!''

''சரி பெரிய ஆண்பிள்ளைதான் போங்கள்— கடைசியாக, போன வருஷப்பிறப்பில் நீங்கள் கூறிய எதையாவது வருஷம் பூராவுஞ்செய்தால் சொல்லுங்கள்'' என்று சன்மானத்தைதக்கப்பலேற்ற ஆயத்தமாஞள்.

''சொல்லிச்செய்பவர்சிறியர்; சொல்லாமற் செய்பவர் பெரியர்!''என்றேன்.

''என்ன அப்படிச் சொல்லாமல்செய்துவிட்டீர்கள்?'' என்றுகேட்டாள். எனக்கு உடனே ஒரு கம்பீரம்உண்டாகி உடலிலே புகுந்தது. ''என் தாடியைப் பார்த்தாயா?'' என்றேன். பார்த்தாள்.

''ஒரு வருஷமாகக்கையோ கத்தியோபடவில்லை; அப்படியேமுறுக்கேறிஇருக்கிறது. இதில் தொடுவதில்லையென்று பிரதிக்ஞை செய்து கொண்டேன்!'' என்றேன்.

''ஷேவ் எடுக்கக் காசு இல்லாமல்போயிருக்கும்'' என்று கேலிசெய்த அவள் கேட்டாள் ''இவ்வருஷம் என்ன பிரதிக்ஞை?''

''வேண்டாம் உந்தத் தொல்லை!'' என்றநான் கதிரையைவிட்டு எழுந்தேன். ''நமக்கும் பிரதிக்ஞைக்கும் வெகுதூரம்... இன்றைக்குச் செய்யக்கூடியவைகளைப் பேசுவோம்'' என்றேன்.

''அதுதான்புத்தி!'' என்றவள் கலீரென்று மனம் விட்டுச் சிரித்துவிட்டாள். பிறகு என்னிடம் மெதுவாக, ''நீங்கள் எனக்கு வாங்கியசேலை பழைய பாஷஞகிவிட்டது'' என்ருள்.

''தொடங்கிவிட்டாயா!'' என்று சலித்தவாறே நான் துண்டை உதறிக்கொண்டு நீராடக்கிணற்றை நோக்கி நடந்தேன்.

---

## கி. ச. தலைவர் நிரபராதி

உடுவில், வியாழன்

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் வீட்டில் 20லொறிடயர்களை வைத்திருந்தார் என்ற பொலிசாரின் குற்றச்சாட்டை விசாரணைசெய்த யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா, கிராமசபைத் தலைவர் நிரபராதிஎனவிசாரணை முடிவில் தீர்ப்புவழங்கியுள்ளார். அவரது டயர்களைத் திரும்பவும் அவரிடம் ஒப்படைக்கும்படியும் அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

சென்றடிசம்பர்மாதம்2ம் திகதி திரு. ச. முத்துலிங்கம் வீட்டில் 30,000ரூபா பெறுமதியான 20லொறி டயர்கள் இருந்ததாகக்குற்றம் சாட்டி காங்கேசன்துறை பொலிசாரால் கைதுசெய்யப்பட்டமுத்துலிங்கம்பிணையில் விடுதலைசெய்யப்பட்டிருந்தார்.

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஆஸ்திரேலியா செல்கிறுர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கல்விச் சேவையில்சிரேஷ்ட நிகழ்ச்சி உதவியாளர்களில் ஒருவரான வி. ஏ. சிவஞானம் இம்மாதம் 17-ந்திகதி குவான்டாஸ் விமான மூலம் ஆஸ்திரேலியா செல்கிறுர். ஒலிபரப்புத்துறையிலும் டெலிவிஷனிலும் நூன பயிற்சி பெறுவதற்காககொழும்புத் திட்ட புலமைப்பரிசுபெற்று ஆறு மாத காலத்துக்கு அவுஸ்திரேலியாவில்பயிற்சி பெறுவார் இவர் கரணவாய் தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை அண்ணுமலையினதும் காலஞ்சென்றதிருமதி. தெய்வயானைஅண்ணுமலையினதும் சிரேஷ்ட புதல்வராவர். இவர்கரவெட்டிவிக்கினேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவரும், கொழும்பு ஸாகிராக் கல்லூரியின் முன்னை நாள் ஆசிரியருமா இவர் லளிதகலைகளில் மிகவும் ஈடுபாடுடையவர் என்பதுடன் 1946ம்ஆண்டு மத்திய மாகாண சங்கீத ஆசிரியர் கர்நாடகஇசைப்போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் பெற்றவர் என்பது கண்டு குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் அதிகாரியை அடையாளமகாட்டினுர்

வவனியா, புதன்

பொலிஸ் நிலையத்திற்குப் புகார் செய்யச்சென்ற தம்மை பொலிஸ் அதிகாரியொருவர் கெடுத்ததாகப் புகார் செய்த பார்வதி என்ற இளம்பெண், அந்தப் பொலிஸ் அதிகாரியை இன்று நண்பகல் நடைபெற்ற ஆள் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டினுர்.

வவனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற பார்வதி என்ற இளம் பெண்ணைக் கெடுத்ததாக வவனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டைத் தொடர்ந்து இன்று நண்பகல் ஆள் அடையாள அணிவகுப்புநடைபெற்றது. இருபதுபேர் கலந்து கொண்ட இந்த அணிவகுப்பில் அந்தப் பொலிஸ் அதிகாரி வெள்ளைச் சாரமும் வெள்ளை சேட்டும் அணிந்திருந்தார். தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கும் இந்த அதிகாரி றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறுர்.

# 1,500 ஏக்கர் நெற்பயிர் தப்பியது

## வவனியா அரசாங்க அதிபரின நடவடிக்கை

வவனியா, புதன்

வவனியா மாவட்டத்திலுள்ள பாவல்குளத்தில் 1500 ஏக்கர் நெற்பயிர்கள் வாடிவதங்கியிருப்பதை அறிந்த வவனியா மாவட்ட அரசாங்க அதிபர் திரு வி. சி. பெரேரா, உடனடியாக அதற்கு நிவாரணமளித்து பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் வேலையை மேற்கொண்டுள்ளார்.

பாவல்குளம் நீர்மட்டம் வரட்சி காரணமாக கீழ்நிலைக்கு போனமையால் குளத்தில் இருந்து நீர்ப்பாய்ச்ச முடியாமலிருந்தது. அரசாங்க அதிபர் உடனடியாக வவனியா விவசாயப்பகுதியினருக்கு சொந்தமான நீர்ப்பாச்சும் இயந்திரங்களை குறிப்பிட்ட இடத்துக்கு அனுப்பி தண்ணீர் இறைக்க ஏற்பாடு செய்துள்ளார். இதனுல் 1500 ஏக்கர் பயிர்கள் காப்பாற்றப்பட்டன.

இப்படியான அவசர வேலையில் உழவுயந்திரம் வேலைசெய்து கொண்டிருக்கும் பொழுது, உழவுயந்திரங்களை உடனடியாக வேறு மாவட்டத்திற்கு அனுப்பும்படி, உத்தரவு கிடைத்ததாகவும், ஆஞலும் தொடர்ந்து யந்திரங்கள் நீர்ப்பாய்ச்சும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

உழவு யந்திரங்களை வேறு மாவட்டத்திற்கு அனுப்பும்படி அரசாங்க அதிபருக்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டதாகவும், இவ்வேலைகள் முடிவடையும்வரை யந்திரங்கள் வேறுமாவட்டத்திற்கு அனுப்பப்படாதென அரசாங்க அதிபர் அறிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

1500 ஏக்கர் நெல் அரசாங்க அதிபரின் முயற்யால் காப்பாற்றப்பட்டதால், சுமார் 1000 குடும்பங்களை எதிர்நோக்கியிருந்த வறுமை நீங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



BG-GC-307

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம், வெள்ளி, குரோமியம்
முதலியவற்றில் முலாம் பூசுவது
போன்ற சகல வேலைகளுக்கும்
யாழ் மெற்றல்
இ ன் ட ஸ் ற் றீ சு க் கு
விஜயம் செய்யுங்கள்
உயர்தரமான வேலைப்பாடு
உத்தரவாதம் செய்யப்படும்
250, 252 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தந்தி : யாழ்மெற்றல்
டெலிபோன் : 7049


Registered at the G. P. O. as a Newspaper விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 இதழ் 63
பிலவங்க சித்திரை 1 முஹறம் 3 (14 4 67) வெள்ளிக்கிழமை

'யாழ் பிராண்ட்'
அலுமினியம், செம்பு, பித்தளை
பாத்திரங்கள்
உற்பத்தி செய்பவர்கள்,
தகைமையும், வேலைத்திறனும்
உறுதிப்படுத்தப்பட்டவை.
யாழ் மெற்றல்
இ ன் ட ஸ் ற் றீ ஸ்
250, 252, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தந்தி : யாழ்மெற்றல்
டெலிபோன் : 7049



இன்று புத்தாண்டு கொண்டாடும் இந்து-பௌத்த மக்கள் ஒற்றுமையாக வணங்கும் தெய்வம் முன்னேச்வரம் ஸ்ரீவடிவாம்பிகா தேவி. அம்பிகையை சரணடைவோர் புத்தாண்டில் நல்வாழ்வு வாழ்வர்.

மோட்டார் வாகனச் சொந்தக்காரரின் பூரண இன்பம் பெறக்கூடிய
மிகச் சிறந்த
எக்சையிட் பற்றறிகளை விற்பனை செய்யும் EXIDE BATTERIES
யாழ்ப்பாண ஐக்கிய [illegible]த்தில் பெற்றுக்கொள்ளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி. எஸ். ஏ.

தரத்துக்கும் வசதிக்கும்



## பி. எஸ். ஏ.

கோல்டின் டி லக்ஸ் ரேட்ஸ்டெர்

உலகின் சிறந்த சைக்கிள்

★ எஃகு உருவ அமைப்பு
★ 'டெரி' ரக சீட்
★ சாமான் பையும்

மற்றும் உபகரணங்களும்

இவ்வருடம் முந்திச் செல்லுங்கள்

ஒரு பி. எஸ். ஏ. வாங்குங்கள்

ஏக விநியோகஸ்தர்கள்:

## கார்கில்ஸ் (இலங்கை) லிமிட்.

# சிலோன் தியேட்டர்ஸ் லிமிட்டெட்

அடுத்த சில மாதங்களில் நாம பெருமையுடன் அளிக்கவிருக்கும் தலைசிறந்த தமிழ்ப் படங்களின் வரிசையில் சில:-

ஜெமினி கணேசன், சாவித்திரி, அசோக்குமார் நடித்த
**அண்ணுவின் ஆசை**

சிவாஜி கணேசன், பத்மினி நடித்த
**பேசும் தெய்வம்**

எம். ஜி. ஆர்., சரோஜாதேவி, நாகேஷ், நம்பியார் பாரதி நடித்த
**நாடோடி**

சிவாஜி கணேசன், பத்மினி, முத்துராமன், தேவிகா, எஸ். எஸ். ராஜேந்திரன். விஜயகுமாரி, நாகேஷ், மனோரமா நடித்த
**தாயே உனக்காக**

எம். ஜி. ராமச்சந்திரன், ஜெயலலிதா, ஆனந்தன் நடித்த
**தனிப்பிறவி**

ரவிச்சந்தர், பாரதி நடித்த
**எங்க பாப்பா**

ஆனந்தன், கீதாஞ்சலி நடித்த
**காட்டுமல்லிகை**

எஸ. எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி நடித்த
**அவன் பித்தனா?**

எம். ஜி. ராமச்சந்திரன், சரோஜாதேவி நடித்த
**அரசகட்டளை**

சிவாஜி கணேசன், சௌகார்ஜானகி நடித்த
**மஹாகவிகாளிதாஸ்**

ஜெய்சங்கர், ஜெயலலிதா, வீரப்பா நடித்த
**யார் நீ?**

எம். ஜி. ராமச்சந்திரன், சரோஜாதேவி நடித்த
**தாலி பாக்கியம்**

சிவாஜி கணேசன், சாவித்திரி நடித்த
**அன்புள்ள அத்தான்**

சௌகார் ஜானகி, சுந்தரராஜன், நாகேஷ் நடித்த
**நீர்க்குமிழி**

ஆனந்தன், கே. ஆர். விஜயா, ராஜ்ஸ்ரீ, நாகேஷ் நடித்த
**தாயின் மேல் ஆணை**

ஜெமினி கணேசன், தேவிகா நடித்த
**இதயத்தில் நீ**

ஜெமினி கணேசன், கே. ஆர். விஜயா, ராதிகா, நாகேஷ் நடித்த
**சின்னஞ்சிறு உலகம்**


இன்னும் பல

## வீட்டுவேலையில் எனக்கு சோர்வு தட்டும்போது....

கரையாத வகையில் பாக்கட் செய்யப்பட்ட

## ப்ரெங்கோ சொக்கலெட்

என்னை மீண்டும் சுறுசுறுப்படையச் செய்கிறது




I get my energy back with -

**france**
**CHOCOLATE**
IN THE MELT PROOF PACK




# எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

## குட் இயர்

### ரயர்களும் ரியூப்களும்

1967 மே மாதம் முதல்வாரமளவில் கீழ்வரும் அளவுகளி லுள்ள ரயர்கள் விநியோகத்துக்கு கிடைக்கக்கூடியதாக இருக் கின்றது.

கையிருப்பு அளவாக உள்ளதால் இப்பொழுதே எம்மிடம் வந்து உங்கள் தேவைகளை எங்களிடம் பதிவுசெய்துகொள்ளுங்கள்.

5.20 X 13 – குட்இயர் ரியூப் இல்லாத ரயர்கள்
6.50 X 13 — ''
5.20 X 14 — '' '' ''
5.60 X 15 — '' '' ''
7.50 X 16 — '' சுப்பர் H M ரயர்கள் 8 பிளை
7.00 X 20 — '' சுப்பர் H M ரயர்கள் 10 பிளை
7.50 X 20 — '' நைலோன் டிரக் ரயர்கள் 10 பிளை
8.25 X 20 — '' நைலோன் டிரக் ரயர்கள் 12 பிளை
400 X 19 — '' டிராக்டர் ரயர்கள் 4 பிளை
550 X 16 '' '' '' 4 பிளை
600 X 16 '' '' '' 4 பிளை
11 X 28 '' '' '' 4 பிளை

எமது பதிவேடுகளில் பதிவுசெய்வதற்கு தயவுசெய்து உங்கள் வாகனங்களின் பதிவுப் புத்தகத்தையும், 1967-ம் ஆண்டிற்குரிய வருமான லைசென்சையும் (Revenue Licence) கொண்டுவரவும்.

## முத்தையா மோட்டார் ஸ்ரோர்ஸ்

(மோட்டார் உதிரிப்பாகங்கள் துணைக்கருவிகள் இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்)

89, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 514 கிரும்: ஜெனூயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஆதரவாளர்களுக்கும்
அன்பர்களுக்கும்

ரொலறமஸ் ஸ்தாபனத்தாரின்
புதுவருட வாழ்த்துக்கள்

# ரொலறம்ஸ்

46, பெரிய தெரு, யாழ்ப்பாணம்.
போன்: 7099



புதிய கிறமபோன் றெக்கோட்டுகள்

"HIS MASTER'S VOICE"
The Hallmark of Quality

புதுவருஷத்தை முன்னிட்டு
அனேக புதிய படப் பாடல்களை தருவித்து இருக்கிறேம்
தேவைக்கு உடன் தொடர்புகொள்ளவும்
மற்றும்
ரேடியோக்கள் அம்பிளிபயர்
விற்பனைக்கும் திருத்துவதற்கும்
நம்பகமான இடம்,

# S. சுலைமான்கண்டு & பிறதர்

5, 7, மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம.



# ஜெனரல் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்

பழைய டயர்களை புதுப்பிக்கும்
வேலைகளுக்குப்

சகலவிதமான
ரப்பர் சாமான்களுக்கும்

தொழில் நிலையங்களுக்குத் தேவையான
தற்காலிக கட்டட தளபாடங்கள்
றப்பர் பொம்மைகள்

ஆகியவற்றிற்கும்

எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

20, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
45, அம்பலவாணர் றேட், யாழ்ப்பாணம்.
போன்: 7024



அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்

எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

# சிலோன் ஸ்டேட்

ஹாட்வெயர் கோப்பரேஷன்
ஸ்தாபனத்தாரின்

- ★ பூட்டுகள்
- ★ பிணைச்சல்கள்
- ★ குண்டு கொளுக்கிகள்

முதலியனவற்றிற்கு
யாழ்ப்பாண விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறேம்
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேம்.

# சண்முகம் ஸ்ரோர்ஸ்

222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 697.



YARL RICE MILL MANIPAY

# யாழ் அரிசி

YARL RICE MILL MANIPAY

- அரிசிகளில் சிறந்தது யாழ் அரிசி !
- சிறந்த நெல்லைக்கொண்டு கல்லு மண் கலப்பின்றி நல்லமுறையில் தயாரிக்கப்பட்டது.
- எமது **யாழ் அரிசியின்** பெயரைச் சொல்லி சில வியாபாரிகள் போலி அரிசியை விற்பதாகத் தெரிகிறது. வியாபாரிகளையும் பாவனையாளர்களையும் அரிசி வாங்கும் போது ஏமாறுமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.
- விபரங்களுக்கு எமது ஆலையுடன் அல்லது வர்த்தக லொறியுடன் தொடர்பு கொள்ளவும்.

தயாரிப்பாளர் :

# யாழ் அரிசி ஆலை

இணுவில் வீதி, மானிப்பாய். தொலைபேசி 553

ஏகவிநியோகஸ்தர்கள் :

வே. க. இ.
துரைரட்டினம் அன் பிறதர்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7142


Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

# புதுவருட வாழ்த்துக்கள்!

**மில்க் வைற் சோப்** பாவிப்பாளர்களுக்கும்
விற்பனையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எமது உளம் கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.




மில்க்வைற் நீலசோப், பார்சோப்

அன்றும் இன்றும் என்றும்

மங்காப் புகழ் பெற்றது.

பட்டுப் பருத்தி ரெர்லின் கம்பெனி முதலிய சகல துணிகளையும், அலுமினியம் கிளாஸ் வகைகளையும்
ஆச்சரியப்படத் தக்க முறையில் சுத்தம செய்கிறது.

# மில்க் வைற் சோப் தொழிற்சாலை
## யாழ்ப்பாணம்.

---

# செய்யது பீடி

தொலைபேசி: **78001**




- ★ தரத்தில் தலை சிறந்தது.
- ★ தலைநகரிலே தலை சிறந்தது.
- ★ தரணியெங்கும் புகழப்படுவது.
- ★ எல்லோரும் விரும்பிப் புகைப்பது.
- ★ விற்பனையில் முன்னணியில் நிற்பது.

## செய்யது பீடியே

# செய்யது பீடி டிப்போ

192, பழைய சோனகத்தெரு, கொழும்பு—12.

---

**மங்களகரமான புதுவருஷ வாழ்த்துக்கள்!**

இலங்கையில் தலைசிறந்த பீடித் தொழிலாளர்களினல்
திறமையுடனும் திருப்தியுடனும்
முதல்ரகப் புகையிலை கொண்டு தயாரிக்கும்

## 786 கல்கி பீடிகளும்

மற்றும்

பிரிட்டிஷ் (சிலோன்) காப்பறேஷன் ஸ்தாபனத்தாரின்
சுவேந்திரா சோப், சந்தன சோப், ஹெக்ஸா குளோரபில்
சேர்ந்த நைட் அன் டே சோப், குக்ஸ் ஜோய்,
வைட் ஓயில் பைனேல்

**B. C. C. கோழித்தீன்**

முதலியனவும்

மற்றும்

பலசரக்குச் சாமான்களும்
மலிவாகவும் நம்பிக்கையுடனும் பெற்றுக்கொள்ளலாம்

# சி. சின்னத்துரை அன் பிரதர்

39, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

டெலிபோன்: 284 — கிரும்: கல்கி

கிளை:
79, மெஸ்ஞ்சர் வீதி, கொழும்பு - 12
டெலிபோன்: 78946

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org